# DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF PRINCIPAL SESSIONS JUDGE, SALEM.

S.C.No.3/2016

Deposition of witness for Prosecution – PW12

| | | | |
|---|---|---|---|
| Name | : கண்ணகி | Caste | : |
| W/o. | : செல்வராஜு | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed on 30.06.2025 in accordance with the provisions of Oaths Act No.44 of 1969.

A1 & A2 absent, petition u/s.317 Cr.PC filed and allowed.

முதல் விசாரணை;

நான் தற்போது நாமக்கல் மாவ்டடம் ராசிபுரம் தாலுகா, புதுப்பாளையத்தில் குடியிருந்து வருகிறேன். நான் தலைமை செவிலியராக பணியாற்றி பணி ஓய்வு பெற்று 7 வருடங்கள் ஆகிறது.

22.12.2014 அன்று நான் தலைமை செவிலியராக தருமபுரி அரசு மருத்துவமனையில் பணியாற்றி வந்தேன். 21.12.2014 அன்று இரவு பணி முடித்துவிட்டு 22.12.2014 அன்று காலை 9.30 மணி அளவில் சேலம் புதிய பேருந்து நிலையத்திலிருந்து என்னுடைய வீட்டிற்கு

செல்வதற்காக ஜோதி பேருந்தில் ஏறினேன். அந்த பேருந்து சேலத்தில் புறப்பட்டு ராசிபுரம், சேந்தமங்கலம் வழியாக நாமக்கல் செல்லும் பேருந்து ஆகும். சுமார் 10.00 மணி அளவில் பேருந்தில் போய்க்கொண்டிருந்தபோது சந்தியூர் பிரிவு ரோட்டில் சேலம் நோக்கி வந்து கொண்டிருந்த மணல் டிப்பர் லாரி வழி மாறி டிவைடரை இடித்துவிட்டு, மறுபக்கம் வந்து நாங்கள் பயணம் செய்த ஜோதி பேருந்தை இடித்துவிட்டு இருசக்கர வாகனத்தில் வந்தவர்களையும் இடித்துவிட்டு பின்னர் காட்டு பக்கம் சென்று பள்ளத்தில் இறங்கிவிட்டது.

எனக்கு நெற்றி, கை, கால், குதிகால் ஆகிய இடங்களில் பலத்த காயம் ஏற்பட்டது. பேருந்தில் பயணம் செய்த இருவர் இறந்துவிட்டதாக சொன்னார்கள். இருசக்கர வாகனத்தில் வந்தவர்களும் இறந்துவிட்டதாக சொன்னார்கள். 108 ஆம்புலன்ஸ் வந்து அடிபட்டவர்களையும் என்னையும் சேலம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்து வந்தார்கள். நான் 108 ஆம்புலன்ஸ் மூலம் அரசு மருத்துவமனைக்கு வந்து, அரசு மருத்துவமனையில் சிகிச்சை எடுக்காமல் சேலத்தில் உள்ள மணிபால் மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்ந்து சிகிச்சை எடுத்துக்கொண்டேன். விபத்து சம்மந்தமாக மணிபால் மருத்துவமனையில போலிசார் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள்.

1ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

எனக்கு அடிபட்டதும், லேசாக மயக்கம் வந்தது என்றால் சரி. நான் சம்பவ சமயத்தில் ஓட்டுனர் சீட்டிற்கு பின்னால் இடதுபக்கம் 3வது

சீட்டில் அமர்ந்திருந்தேன். பின்னர் தூக்கி எறியப்பட்டு டிரைவருக்கு பின்னால் விழுந்தேன்.  அதற்கு பிறகுதான் எனக்கு காயம்பட்டவர்கள் மற்றும் இறந்தவர்கள் பற்றிய விவரம் தெரியும் என்றால் சரி.

2ம் எதிரி தரப்பில் 1ம் எதிரி தரப்பில் செய்யப்பட்ட குறுக்கு விசாரணை தழுவிக்கொள்ளப்பட்டது.

Sd/- S.Sumathy,

Principal Sessions Judge, Salem.